திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இதுபோன்ற பயிற்சிப் பள்ளியைப் புதிய அரசாங்கம் தொடங்கியதா, அல்லது, பழைய அரசாங்கம் தொடங்கியதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஏற்கனவே இருந்த அரசாங்கம்தான் இதைத் தொடங்கிற்று. 1965-ம் வருடம் மே மாதம் 6-ம் தேதியில் அந்தப் பள்ளி துவக்கப்பட்டது.

திரு. பி. ஜயராஜ் : தமிழ் நாட்டில் எங்கு பார்த்தாலும் தேர்கள் இருக்கிற காரணத்தினால், சமீபத்தில் தேர்களுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டு அதன் மூலம் ஏலதார்கள் அதிகமாகப் போட்டி போட்டுக் கொண்டு அவற்றை ஏலம் எடுப்பதற்கு முன்வருவதற்குக் காரணம், தேர் பொம்மைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு மிகவும் தேவைப் படுகின்றன என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றி விவரம் இல்லை. விவரம் தரப்பட்டால் அது கவனிக்கப்படும்.

திரு. வி. டி. அண்ணாமலை : இப்பொழுது மரத் தேர் கட்டுவதற்கான பயிற்சிதான் அளிக்கப்பட்டு வருகிறது. வெள்ளித் தேர் செய்வதற்குப் பயிற்சி கொடுப்பதற்கும் சில ஆசிரியர்களை நியமிக்க இந்த அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்பொழுது மரத்தேர் செய்வதற்குதான் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் வெள்ளித் தேர் செய்கின்ற நிலைமைக்கு வரமாட்டார்கள். முதலில் மரத் தேர் செய்து முடித்த பிறகு, அதற்கு மேல் வெள்ளிப் பட்டையங்களை அமைப்பதற்கான முயற்சியில் வெள்ளித் தேர் செய்வதில் பயிற்சி பெற்றவர்கள் ஈடுபடுவார்கள். இதற்கு இருக்கிற பயிற்சி வேறு. அதற்கு இருக்கிற பயிற்சி வேறு. இதிலே தேறுபவர்கள் வேறு. அதிலே தேறுபவர்கள் வேறு.

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : கேள்விகள் 139, 140, 141, 142 ஆகியவை ஒத்திவைக்கப்படுகின்றன.

Sub-Treasury at Pallipet.

*143 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to establish a Sub-Treasury Office at Pallipet, Chingleput district ?

THE HON. THIRU C. N. ANNADURAI : No, Sir.

THIRU K. VINAYAKAM : Whereas there is an Independent Deputy Tahsildar's Office in Pallipet, in consonance with the establishment of that office will the Government re-examine the issue ? As the residents of Pallipet will have to go to the Treasury at Tiruttani to remit or withdraw money, on humanitarian consideration will the Government re-examine the issue ?

THE HON. THIRU C. N. ANNADURAI : The point made by the hon. Member does not arise, because already the work in the Tiruttani office is not sufficient as to warrant another office to be opened at Pallipet. I can very well understand the Member representing that constituency urging for such a thing. But from the financial point of view, it is not necessary.

1967 ஜூலை ௰

திரு ந. தருமலிங்கம் : தஞ்சை மாவட்டத்தில் வேதாரண்யத்தில் ஒரு டெப்டி தாசில்தார்தான் இருக்கிறார். அங்கே ஒரு துணைக் கருவூலம் அமைக்கவேண்டும் என்று நீண்ட காலமாக அரசாங்கத்திற்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதை உடனடியாக அமைக்கிற எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா?

மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை : இந்தக் கேள்வி பள்ளிப் பட்டில் துணைக் கருவூலம் அமைப்பது பற்றியது. ஆகவே, இதனுடைய தொடர்பாக வேறு கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வி பள்ளிப் பட்டில் துணைக் கருவூலம் அமைப்பது பற்றியது. கனம் உறுப்பினர்கள் அதுபற்றி கேள்விகள் கேட்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : In view of the local importance of this question, will the Government take up for consideration the construction of office buildings at least for the independent Deputy Tahsildar ?

THE HON. THIRU C. N. ANNADURAI : Even without local importance the question assumes importance because of the importance of the hon. member. But financial considerations only refrain us from taking up that matter.

கல்லூரிக் கட்டடங்கள்.

*** 144 வினா—திரு மா. பா. சாரதி :** மதிப்பிற்குரிய கல்வி–தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேலூர் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடங்கள் கட்டுவதற்கு நிலம் வாங்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது கட்டடங்கள் கட்டி முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) அதிக அளவில் முதலீடு செலவுகளை, தவிர்க்கும் பொருட்டு இந்த வேலையைத் தற்போது எடுத்துக் கொள்ள உத்தேசம் இல்லை.

*** 145 வினா—திரு. மா. பா. சாரதி :** மதிப்பிற்குரிய கல்வி–தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேலூர் முத்துரங்கம் அரசினர் கலைக் கல்லூரிக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கான நிலம் வாங்கப்பட்டுவிட்டதா?

(இ) ஆம் எனில், கட்டடங்கள் எப்பொழுது கட்டப்படும்?

(உ) அதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள செலவுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இந்த வேலையை நடப்பு ஆண்டிலேயே துவக்க உத்தேசிக்கப்பட்டு இருக்கிறது.

(உ) ரூ. 8.50 லட்சம்.

திரு. ரா. ரா. முனுசாமி : வேலூர் முத்துரங்கம் அரசினர் கலைக் கல்லூரிக்கு நிரந்தரமான கட்டடங்கள் கட்டுவதற்கு நிலம் வாங்கப்பட்டதா? ஆமெனில், எப்பொழுது கட்டடம் கட்டி முடிக்கப்படும் ?